[24th January 1961

SRI S. M. ANNAMALAI : ஸார், ஜவ்வாது மலை மீதிருந்து கீழே இறங்கி வரவேண்டுமென்றால், 20 மைலுக்கு மேல் ஆகிறது. தவிர, சரியான ரோடு வசதி கிடையாது. அங்கே இப்போது 5-வது வகுப்பு வரைதான் பள்ளிக்கூடம் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலையை ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அப்படி ஒரு உயர்தர ஆரம்பப் பள்ளியை அங்கு ஆரம்பித்து நடத்துவது அவசியமானால், அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டால், அதற்கு சர்க்கார் தனது ஒத்துழைப்பைக் கொடுக்கும்.

Palar

* 156 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் பொது மாராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பாலாற்றுக்குத் தண்ணீர் விடுவது சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் சமீபத்தில் சென்னை சர்க்காருக்கும் மைசூர் சர்க்காருக்கும் நடைபெற்றதா?

(இ) அப்படியானால் அதன் முடிவென்ன?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Will the Government approach the Mysore Government for the release of water to the Palar which is now dry?

THE HON. SRI P. KAKKAN : இந்த வருடம் நல்ல மழை பெய்து இருக்கிறது. வெள்ளமும் வந்திருக்கிறது. அதேபோல் எப்படியாவது அவர்கள் கொடுக்காவிட்டாலும், தண்ணீர் வந்து விடுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Text-books

* 157 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Madras State Education Conference held at Madurai has recommended to the Government to drop proposals to publish Text-books; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) No action is considered necessary.

24th January 1961]

SRI A. A. RASHEED : May I know the number of text-books so far published and may I also know whether these text-books are sold on 'no profit no loss' basis?

THE HON. SRI C. SUBRAMANIAM : One text-book, the English text-book for the V Standard has been published and it has been sold comparatively at lesser price than the one sold by private publishers.

SRI K. SATTANATHA KARAYALAR : *இந்த மகாநாடு யாரால் நடத்தப்படுகிறது. இது வருடாந்திர மகாநாடா? சர்க்கார் இதில் பங்கு எடுத்துக் கொள்ளுகிறார்களா? சர்க்கார் டிபார்ட்மெண்டுகள் இதில் பங்கு எடுத்துக் கொள்ளுகிறதா?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *இதை ஆசிரியர்கள் நடத்துகிறார்கள். அதிலே சர்க்கார் என்கிற முறையில் பங்கு எடுத்துக்கொள்ளுவதில்லை. மந்திரிகள், டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்டிரக்ஷன் ஆகியோர் தனிப்பட்ட முறையிலே பங்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள்.*

SRI K. VINAYAKAM : In addition to this English text book for V Standard do the Government propose to publish any other book in other subjects like Arithmetic, Social Studies or some other subject?

THE HON. SRI C. SUBRAMANIAM : The decision is to publish text-books necessary for I to V Standards. Because the printing capacity is not available it is being postponed. Attempts are being made to get the necessary printing machinery.

" Level jumping "

* 158 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether 'Level jumping' had been introduced in our departments as they have been introduced in the departments of the Government of India?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir. But it is already in force to a limited extent in the Madras Secretariat.

SRI K. SATTANATHA KARAYALAR : *'லெவல் ஜம்பிங்' என்றால் என்ன? இதனால் எந்த அளவு வேலை குறைவுபடுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.*

THE HON. SRI C. SUBRAMANIAM : *'லெவல் ஜம்பிங்' பற்றி கேள்வி கேட்டிருப்பதால், அதைப் பற்றி தெரிந்துக் கொண்டுதான் கேள்வி கேட்டிருக்கிறார்கள் என்று நம்பிக் கொண்டிருந்தேன். இப்பொழுது செகரடேரியட் அலுவலகத்தில் லோயர் டிவிஷன் கிளார்க், அப்பர் டிவிஷன் கிளார்க், சூபரின்டெண்டெண்ட், உதவிக் காரியதரிசி, டெப்யூடி காரியதரிசி, காரியதரிசி என்கிற அமைப்பிலே வரிசையாக இருக்கிறது. இவர்கள்*